**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**நோன்புப் பெருநாள் பிரசங்கம்**
**25 ஜூன் 2017 / 01 ஷவ்வால் ஹிஜிரி 1438**

# <u>உள்ளூர் கலாச்சாரத்துக்கு மதிப்பளிக்கும் இஸ்லாம்</u>

اللهُ أكبر × ٩ كالي

اللهُ أكبر مَا تَعَالَتْ أَصْوَاتُ النَّاسِ بِالتَّكْبِيْرْ

اللهُ أكبر مَا تَفَتَّحَتْ أَبْوَابُ السَّمَاءِ فِي هَذَا الصَّبَاحِ الْكَبِيْرْ

اللهُ أكبر مَا تَنَزَّلَتْ عَلَيْنَا رَحْمَةُ الْإِلَهِ الْعَلِيِّ الْقَدِيْرْ

اللهُ أكبر مَا تَقَارَبَتْ قُلُوْبُ الْمُسْلِمِيْنَ فِي هَذَا الْيَوْمِ الْمُنِيْرْ

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،

لاَ إِلـــهَ إِلاَّ اللهُ و اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِى أَمَدَّ أَوْلِيَاءَهُ بِالتَّوْفِيْقْ ، وَأَلْهَمَهُمْ كَلِمَةَ الْحَقِّ وَالتَّصْدِيْقْ ، وَأَرْشَدَهُمْ إِلَى أَوْضَحِ مَحَجَّةٍ وَطَرِيْقْ ، وَجَعَلَهُمْ بِرَحْمَتِه خَيْرَ أُمَّةٍ وَفَرِيْقْ ، أَحْمَدُهُ عَلَى النِّعْمَةِ الَّتِى بِهَا حَبَانَا ، وَأَشْكُرُهُ عَلَى الْمِلَّةِ الَّتِى بِهَا هَدَانَا.

وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهْ ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهْ ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَمَنِ اهْتَدَى بِهَدْيِهْ.

أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اِتَّقُوا اللَّهَ وَأُوْصِي نَفْسِيْ وَإِيَّاكُمْ بِتَقْوَى اللَّهِ وَطَاعَتِهْ.

அன்பிற்குரிய முஸ்லிமீன், முஸ்லிமாத் (முஸ்லிமான ஆண்களே பெண்களே!)

அண்மையில், நம்மை விட்டும் கடந்து சென்ற ரமதான் மாதம் முழுவதிலும் அல்லாஹ் நம்மீது பொழிந்த அனைத்து அருள்களை அடைவதற்கும், அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்கும் வாய்ப்பளித்த எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு, சிறப்புமிக்க இந்நாளில், நமது உள்ளங்களின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோமாக! ரமதான் மாதத்தில் அல்லாஹ்வுக்காக நாம் நிறைவேற்றிய அனைத்து வணக்க வழிபாட்டுச் செயல்களும் நற்காரியங்களும், ஆண்டு முழுவதும் அல்லாஹ்வின் மீதான ”தக்வா” (பக்தியுடன்) நாம் இருப்பதற்கும், அல்லாஹ்வின் அருளை ஆர்வத்துடன் வேண்டுவதற்குமான சிந்தனையை நம்மில் ஏற்படுத்தட்டுமாக! ரமதான் மாதத்தில், நாம் நம்மில் ஏற்படுத்திக் கொண்ட ”தக்வா” (பக்தியானது) அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-அ..ரா..ப்” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 26-வது வசனத்தில் கூறுவது போல் நம்மை அலங்கரிப்பதாக அமையட்டுமாக!:

يَٰبَنِيٓ ءَادَمَ قَدۡ أَنزَلۡنَا عَلَيۡكُمۡ لِبَاسٗا يُوَٰرِي سَوۡءَٰتِكُمۡ وَرِيشٗاۖ وَلِبَاسُ
ٱلتَّقۡوَىٰ ذَٰلِكَ خَيۡرٞۚ ذَٰلِكَ مِنۡ ءَايَٰتِ ٱللَّهِ لَعَلَّهُمۡ يَذَّكَّرُونَ ٢٦

பொருள்: ஆதமுடைய மக்களே! மெய்யாகவே, நாம் உங்களுக்கு உங்களுடைய மானத்தை மறைக்கவும், உங்களுக்கு அலங்காரமாகவும், ஆடையை அளித்துள்ளோம். ஆயினும் தக்வா (பயபக்தி) எனும் ஆடையே (அதைவிட) மேலானது. இது அல்லாஹ்வுடைய (அருளின்) அடையாளங்களில் (ஒன்றாக) உள்ளதாகும் - (இதைக் கொண்டு) நல்லுணர்வு பெறுவார்களாக.

அருள்மிக்க முஸ்லிமீன், முஸ்லிமாத் களே!
நோன்புப் பெருநாளில் பின்பற்றப்படும் "சுன்னாஹ்" மற்றும் வழிமுறையைப் பிரதிபலிக்கும் வகையில் நம்மில் பலர் சிறந்த ஆடைகளை இத்தருணத்தில் உடுத்தியுள்ளார்கள். இது இறைத்தூதர்(ஸல்) அவர்களின் வழிமுறையாகும். நோன்புப் பெருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்கு அவர்களால் ஆர்வமூட்டப்பட்டதாகும். செய்யிததினா ஆயிஷா (ரலி) அறிவிக்கின்றார்கள்:

وَاللَّهِ لَقَدْ رَأَيْتُ رَسُولَ اللَّهِ -صلى الله عليه وسلم- يَقُومُ عَلَى بَابِ حُجْرَتِى - وَالْحَبَشَةُ يَلْعَبُونَ بِحِرَابِهِمْ فِى مَسْجِدِ رَسُولِ اللَّهِ -صلى الله عليه وسلم- يسْتُرُنِى بِرِدَائِهِ لِكَىْ أَنْظُرَ إِلَى لَعِبِهِمْ

பொருள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாகக் கூறுகிறேன். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களது ”மஸ்ஜிந் நபவி” பள்ளிவாசலின் மைதானத்தில், அபீஸீனியர்கள் ஈட்டிகளால் சண்டையிட்டு விளையாடுவதை நான் பார்த்து ரசிப்பதற்காக, எனது அறையின் வாசலில், எனக்கு முன்பாக, இறைத்தூதர்(ஸல்) துண்டை பிடித்துக் கொண்டு நின்றார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

மற்றொரு அறிவிப்பில்: இந்த விளையாட்டு பெருநாளின் போது நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. அப்போது செய்யிதினா உமர் (ரலி) அவர்கள், அபீஸீனியர்களின் இச்செயலையும், மஸ்ஜிதுந் நபவியில் அவர்கள் நடனமாடியதையும் வெறுத்தார்கள். இது போன்ற செயல்கள் சரியானதல்ல எனவும் கருதினார்கள். அவர்களிடம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், உமரே! இது அவர்களின் கலாச்சாரமாகவும் வழிமுறையாகவும் உள்ளது. எனவே, அவர்களை விளையாட விடுவீராக! என்று அறிவுறுத்தினார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

சுப்ஹானல்லாஹ்!(அல்லாஹ் மிகவும் மேன்மையானவன்). நமது மார்க்கம் எந்தளவு சிறப்பான மார்க்கம் என்பதை மேற்கண்ட வரலாறு சுட்டிக் காட்டுகிறது. நாம் ஏற்கனவே கூறியது போன்று, ஈதுப் பெருநாட்களை நாம் மகிழ்ச்சியாக கொண்டாடுவதற்கு நம்மை ஆர்வமூட்டும் வகையில், பெருநாட்களை இப்படித்தான் கொண்டாட வேண்டுமென இஸ்லாம் வரையறுத்துக் கூறவில்லை. நாம் கொண்டாடும் முறையானது, இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளுக்கு முரண்படாமல் இருக்குமெனில், அது இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகும். ஒவ்வொரு இனத்தைச்

சேர்ந்தவர்களுக்கு, அவர்களுக்கே உரிய தனிப்பட்ட கலாச்சாரங்களும் வழிமுறைகளும் உள்ளன. அரேபியர்கள், மலேஷியர்கள், இந்தியர்கள், சீனர்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கலாச்சாரங்கள் உள்ளன.

பலதரப்பட்ட முஸ்லிம் சமுதாயங்கள் கூட பலமாதிரியாக ஈதுப் பெருநாட்களைக் கொண்டாடுவதை நாம் காண்கிறோம். இது, இஸ்லாம் எந்த அளவு சுதந்திரமான மார்க்கம் என்பதையும், நேர்மையான அனைத்து கலாச்சாரத்துக்கும் தொடர்ந்து உகந்ததாக இருக்கும் மார்க்கம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. இஸ்லாம், தனது சிறந்த மதிப்பீடுகளின் மூலம் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டுகிறது. அதே சமயம், அவர்களின் சொந்த கலாச்சாரங்களை இஸ்லாம் மறுக்கவுமில்லை. புறக்கணிக்கவுமில்லை.

ஜமாஅத்தார்களே! முற்றிலும் இஸ்லாமிய வாழ்க்கையாக வாழ வேண்டும் என விரும்புவது ஒரு உடன்பாடான முன்னேற்றம் ஆகும். அது ஒருவரது "ஈமான்" (இறை நம்பிக்கை) எந்த அளவு சிறப்பாக உள்ளது; எப்போதும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டுமென்பதில் அவர் எந்த அளவு ஆர்வமாக உள்ளார் என்பதைச் சுட்டி காட்டுகிறது. எனினும், இதன் பொருள், இஸ்லாமிய மதிப்பீடுகளுக்கு ஒத்து உள்ள நமது கலாச்சாரத்தையும் நாம் விட்டு விட வேண்டுமென்பதல்ல. நமக்குள் மன்னிப்பு கேட்டுக் கொள்வதானது திருக்குர்ஆனில் மிகவும் ஆர்வமூட்டப்பட்டுள்ள ஒரு செயலாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَلَا يَأْتَلِ أُولُوا الْفَضْلِ مِنكُمْ وَالسَّعَةِ أَن يُؤْتُوا أُولِي الْقُرْبَىٰ
وَالْمَسَاكِينَ وَالْمُهَاجِرِينَ فِي سَبِيلِ اللَّهِ ۖ وَلْيَعْفُوا وَلْيَصْفَحُوا ۗ أَلَا
تُحِبُّونَ أَن يَغْفِرَ اللَّهُ لَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٢٢﴾

பொருள்: இன்னும், உங்களில் (இறைவனின்) கொடை அருளப் பெற்றவர்களும், தக்க வசதி உடையவர்களும், உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும், (தம்மிடங்களை விட்டு) அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் (எதுவும்) கொடுக்க முடியாது என்று சத்தியம் செய்ய வேண்டாம்; (அவர்கள் தவறு செய்திருப்பின்) அதை மன்னித்து (அதைப்) பொருட்படுத்தாமல் இருக்கவும்; அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ் (பிழை பொறுப்பவன்) மிக மன்னிப்பவன்; அன்பு மிக்கவன். (அத்தியாயம்: அந்நூர், வசனம்: 22)

தற்கால பரபரப்பான வாழ்க்கை முறையில், நம்மில் ஒருவர் மற்றவரைச் சந்தித்துக் கொள்வதற்கும், நமது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடனான நமது உறவுகளைப் புதுப்பித்து, உறுதி செய்து கொள்வதற்கும் பெருநாட்கள் சிறந்த வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில், நம்மில் ஒருவர் மற்றவரை மன்னித்துக் கொள்வதற்கும், ஒருவர் மற்றவரிடம் மன்னிப்பைத் தேடிக் கொள்வதற்கும் இது ஒரு அரிய வாய்ப்பல்லவா?

நம்மில் ஒருவர் மற்றவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதானது நோன்புப் பெருநாளின் உயிரோட்டத்துடன் கலந்ததாகும். பாவங்களை விட்டும் நாம் பரிசுத்தமாகி, நமது இயற்கையான நிலையின் பால் திரும்ப வேண்டுமென்பது அதன் நோக்கமாகும். எனவே, நாம் நமது குடும்பத்தார்களையோ அல்லது நண்பர்களையோ சந்திக்கும் போது, ஒருவர் மற்றவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் நோன்புப் பெருநாளின் உண்மையானப் பொருளை அறியும் ஆற்றலைப் பெறுவோம் எனும் நோக்கிலும், அல்லாஹ்வுக்கு எதிராகச் செய்யப்பட்ட பாவங்கள் மட்டுமல்ல, சக அடியார்கள், சகோதர, சகோதரிகளுக்குச் செய்யப்பட்ட பாவங்களும் மன்னிக்கப்பட வேண்டுமென நாம் விரும்புவோம் என ஆதரவு வைத்தும் அவ்வாறு செய்கிறோம். மற்றவர்களை மன்னிப்பதற்கு நமது உள்ளங்கள் தயாராகி விடும் போது ”நான்” எனும் அகங்காரம் நமது உள்ளங்களை விட்டும் அகன்று விடுகின்றது. அதற்கு, மன்னிப்பு கேட்டுக் கொள்ளும் இக்கலாச்சாரம் உதவியாக உள்ளது. குடும்பங்களுக்கு மத்தியிலான தொடர்பை இக்கலாச்சாரம் உறுதி செய்வதால் இதுவும் இஸ்லாமியப் போதனைகளின் வரிசைகளில் ஒன்றாக அமைகிறது. ஜமாஅத்தார்களே! எந்த ஒரு வழிமுறை அல்லது விதிமுறைக்கு எதிரானக் கருத்து மார்க்கத்தில் இல்லையோ அது இஸ்லாத்தில் அங்கீகரிப்பட்டதாகவே கருதப்படும் என்பதை நாம் அறிய வேண்டும்.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**
**அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து**

மஆஷரல் முஸ்லிமீன்! வஜும்ரதல் முஃமினீன்! (முஸ்லிமான, முஃமினான சமுதாய மக்களே!)

இதுதான், இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். இடம் அல்லது வட்டாரத்தில் காணப்படும் சிறந்த கலாச்சாரத்தை, விதிமுறைகளை இஸ்லாம் அங்கீகரிக்கிறது. ”ஒரு சமுதாயம் அல்லது ஒரு இடத்தில் காணப்படும் சமூக வழிமுறை மற்றும் விதிமுறைக்கு எதிராக இஸ்லாத்தில் எவ்வித ஆதாரமும் இல்லையெனில், அது உறுதியான சட்டமாகக் கருதப்படும்” என்பது ஃபிக்ஹு (இஸ்லாமிய சட்ட விளக்கத்தில்) காணப்படும் அம்சமாகும். ஒரு முஸ்லிம் தனது நம்பிக்கையில் உறுதியாக இருக்கும் நிலையில், இஸ்லாத்திற்கு உகந்த தனது கலாச்சாரத்தை அவர் பின்பற்றி வாழலாம் என்பதும் இஸ்லாமியக் கொள்கைகளில் ஒன்றாகும். எனவே, மலாய் தீவுகளில் வாழும் முஸ்லிம்கள், தமது கலாச்சாரத்தை விடவில்லையென்றாலோ அல்லது மக்கா, மதீனா போன்ற புனிதப் பூமிகளை விட்டும் அவர்கள் தூரமாக இருப்பதாலோ சிறந்த முஸ்லிம்களாக அவர்கள் ஆக முடியாது என நினைக்க வேண்டாம்.

இப்பிரதேசத்துக்கு இஸ்லாம் வந்த போது, இப்பிராந்தியத்தில் வாழ்ந்த சமுதாயங்களிடம் காணப்பட்ட, இஸ்லாமியப் போதனைகளுக்கு முரண்படாத எந்த ஒரு கலாரச்சாரத்தையும் வழிமுறையையும் இஸ்லாம் அழிக்கவில்லை என வரலாறு கூறுகிறது. இஸ்லாம் அனைத்து கலாச்சாரங்கள், கலைகளை மட்டுமல்ல, சிறந்த இலக்கியங்களைக் கூட அங்கீகரிக்கிறது. உண்மையில், திருக்குர்ஆனின் மொழி மிகவும் சிறப்பாக இருப்பதால் இலக்கிய ரீதியிலும் கூட திருக்குர்ஆன் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஒருவர், தனது மார்க்கத்தை நேசிப்பதோடு, தனது நாடு, இனம், கலாச்சாரம் போன்றவற்றையும் நேசிப்பது முரண்பட்ட விஷயமல்ல என இஸ்லாம் போதிக்கிறது. இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) அறிவிக்கின்றார்கள்:

"ஃபுதைக்" (ரலி) எனும் நபிதோழர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது மதீனா நகருக்கு "ஹிஜ்ரத்" (தியாகப் பயணம்) செய்ய விரும்பி, நபி(ஸல்) அவர்களிடம் அதற்காக அனுமதி கேட்டார். காரணம், தனது முஸ்லிமான மக்களுடன் அவர் வாழ விரும்பினார். இவ்விஷயத்தில் அவருக்கு நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு ஆலோசனை வழங்கினார்கள்:

يَا فُدَيْكَ أَقِمِ الصَّلَاةَ، وَآتِ الزَّكَاةَ وَاهْجُرْ السُّوْءَ، وَاسْكُنْ مِنْ أَرْضِ قَوْمِكَ حَيْثُ شِئْتَ

பொருள்: ஃபுதைக்கே! தொழுகையை நிறைவேற்றுவீராக! ஜகாத்தைக் கொடுத்து வருவீராக! தீய விஷயங்களை வெறுப்பீராக! இந்நிலையில், உமது சமுதாய மக்கள் வாழும் எந்த பகுதியிலும் நீர் வசிக்கலாம்.

மற்றொரு அறிவிப்பில் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பின்வருமாறும் கூறியதாக அறிவிக்கப்படுகிறது:

اَلْبِلَادُ بِلَادُ اللهِ وَالْعِبَادُ عِبَادُ اللهِ وَحَيْثُمَا أَصَبْتَ خَيْرًا فَأَقِمْ

பொருள்: நாடுகள் அல்லாஹ்வின் நாடுகளாகும். அடியார்கள் அனைவரும் அல்லாஹ்வின் அடியார்களாகவே உள்ளார்கள். உமக்கு எங்கு நலன் கிடைக்கிறதோ அங்கு வசிப்பீராக! (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மத் ரஹ்)

மேற்கண்ட ஹதீதில் நமக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் காணப்படுகின்றன. ஒருவர் எங்கு வாழ்ந்தாலும் சிறந்த முஸ்லிமாக வாழ

முடியும். உள்ளூர் சமுதாய மக்களுக்கு அவரால் பங்காற்ற முடியும். அவர் வாழும் பகுதியிலுள்ள மக்கள் அவர் மூலம் பலன்களை அனுபவிக்க முடியும் வகையில் அவரது பங்காற்றுதல் இருக்குமெனில், அவரைச் சுற்றியுள்ள மக்கள் அவரைப் போற்றுவார்கள்.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**
**அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
நான், சற்று முன்பு உங்களுடன் பகிர்ந்து கொண்ட இஸ்லாமிய வழிகாட்டுதலை அறிவதும், ஆழமாக ஆய்வு செய்வதும் அவசியமாகும். காரணம், ஓரிறை நம்பிக்கையாளராக உள்ள ஒரு தனிநபர் இவ்வழிகாட்டுதலை அறியத் தவறினால், அப்பெண் அல்லது ஆண், சமுதாயத்தின் விதிமுறைக்குப் பழக்கமில்லாத, அந்நியமான வழிமுறைகளைப் பின்பற்ற நேரிடும். அதுமட்டுமல்ல, தங்களிடம் காணப்படும் வழிமுறைகளை விட இப்புதிய வழிமுறைகள் தான் அதிக இஸ்லாமிய மயமானது எனும் சிந்தனை அவர்களிடம் ஏற்பட்டு விடுமெனில் பிரச்சனை இன்னும் மோசமாகி விடும்.

பெரும்பாலும், இது போன்ற சிந்தனைகள், புதிய விஷயங்களாலும், வழமை மற்றும் விதிமுறைக்கு மாறுபட்ட விஷயங்களாலும் ஒருவர் கவரப்படும் போது ஏற்படுகின்றன. உதாரணமாக, சிங்கப்பூரர்கள் உற்பத்தி மற்றும் உயர் தரத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் செய்யும் கலாச்சாரத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும், அல்லாஹ்வின் நாட்டப்படி, சிங்கப்பூர்களாகிய நாம் உலக மக்கள் அனைவராலும் உற்று நோக்கப்படும்

ஒரு நாட்டை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளோம். நிச்சயமாக, சிங்கப்பூரர்களிடம் காணப்படும் இவ்விதமான தொழில் கலாச்சாரம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் போதனைகளின் வரிசையில் காணப்படுவதாகும். வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் இணைந்து செயல்பட வேண்டும் *(gotong royong)* என்ற மலாய் கலாச்சாரமும் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் போதனைகளில் ஒன்றாகும்.

இதுதான், நாம் அனைவரும் இணைந்து உருவாக்கியுள்ள சமுதாயத்தின் யதார்த்த நிலையும் விதிமுறையுமாகும். ரமதான் மாதம் முழுவதிலும் நாம் கடைப்பிடித்த கலாச்சாத்தை நினைவில் கொள்ளுங்கள்! நாம் நோன்பு நோற்றிருந்த போதிலும், சோம்பேறியாக நாம் இருப்பதற்குக் காரணமாக ரமதான் மாதத்தை  நாம் ஆக்கவில்லை.

எனவே, ஜமாஅத்தார்களே! நம்மிடம் காணப்படும் இந்த நல்ல கலாச்சாரத்தின் அருமையை நாம் உணர வேண்டும். இக்கலாச்சாரம் நமது வாழ்வில் தொடர்ந்து பிரகாசிக்க வேண்டும். இது, எந்த வகையிலும் இஸ்லாமியப் போதனைகளுக்கு எதிரானதல்ல. சிங்கப்பூருக்கு வெளியில் காணப்படும் காட்சிகளால் நாம் எளிதில் கவரப்பட்டு விடக் கூடாது. இக்கரையை விட அக்கரை எப்போதும் பச்சையாகவேத் தென்படும். மற்றவர்கள் அணியும் ஆடையை நாம் அணிவதாலோ அல்லது மற்றவர்களின் பேச்சை நாம் பேசுவதாலோ இஸ்லாமிய மார்க்கமோ அல்லது நமது நம்பிக்கையோ ஒருபோதும் உறுதியாகி விடாது.

உண்மையான புரிதல், உணர்தல், கல்வியறிவு, தீர்மானம், நற்குணம், தெளிவான நோக்கங்கள் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலமே

உலகோரின் கண்களில் நமது மார்க்கமும் சமுதாயமும் உயர்வானதாக அமையும். இம்மதிப்பீடுகள் தான், நமது கலாச்சாரமாகவும் நமது தனித்தன்மையின் பகுதியாகவும் இருக்க வேண்டும்.

எனவே, நிச்சயமற்ற மூலங்களிலிருந்து வரும் அழைப்புகள் விஷயத்தில் நாம் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, தொழில் நுட்பங்கள் மேம்பட்டுள்ள, சமூக ஊடகங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற இக்காலத்தில், இது, மிகவும் சிந்திக்கத்தக்க விஷயமாகும். வெளியில் உள்ள சில தனிநபர்கள், இறைத்தூதர்(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட ”ரஹ்மத்” மற்றும் நற்காரியங்களின் மதிப்பீடுகளை, இஸ்லாமியப் போதனைகளை விட்டும் பிரிக்க முயல்கின்றார்கள். நாம் மார்க்கத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையெனில் இது போன்ற செயல்களால் நாம் ஏமாற்றப்பட வாய்ப்புள்ளது. சிலர், சண்டை, சச்சரவுகள், போர்கள், தீவிரவாதச் செயல்கள் போன்றவற்றில் கலந்து கொள்ள விடுக்கப்படும் அழைப்புகளால் கவரப்பட்டுள்ளார்கள். இது போன்ற செயல்கள் நமது மார்க்கத்தின் புனிதத் தன்மைக்கு எதிரானவையாகும். இவை நமது மார்க்கத்தின் சிறந்த பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துபவையாகவும், இஸ்லாத்தின் உண்மையானப் போதனைகள் விஷயத்தில் குழப்பத்தை ஏற்படுத்துபவையாகவும் உள்ளன. குழப்பங்கள் மற்றும் இரத்தம் சிந்துவதற்குக் காரணமாக இருப்பவர்களின் செயல்களால் நமது சமுதாயத்தின் அனைத்து நல்ல முயற்சிகளும் பாதிக்கப்பட்டு, அவை ஓரங்கட்டப்படுகின்றன.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**

**அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

நமது மார்க்கத்தின் சிறந்த பெயரைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் இணைந்து பங்காற்றுவோமாக! ரமதான் மாதம் முழுவதிலும், நமது வாழ்நாள் முழுவதிலும் நாம் வளர்த்துப் பராமரித்து வந்த "ரஹ்மத்" எனும் மதிப்பீட்டைப் பிரகாசிக்கச் செய்வோமாக! நமது மார்க்கத்தின் புனிதத்தைப் பாதுகாப்போமாக! நமது பாசத்திற்குரிய மார்க்கத்தை எதிர்மறையான பார்வையில் பார்ப்போரின் எண்ணங்களை, உணர்வுகளை மாற்ற முயல்வோமாக! நம்மில் எவராவது தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதை நாம் பார்த்தால், அப்பிரச்சனையில் அவர்கள் ஆழமாக மூழ்கி விடுவதற்கு முன்பாக, தாமதிக்காமல், முடிந்தளவு விரைவில் அப்பிரச்சனையைத் தீர்க்க உதவி தேட வேண்டும்.

நமது குடும்பத்தார்கள், உண்மையான கல்வியறிவையும் வழிகாட்டுதலையும் பெறுவதற்காக நாம் செய்யும் முயற்சிகளுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! இன்ஷாஅல்லாஹ், ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**

**அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

யா அல்லாஹ்! யா ஃபத்தாஹ்! யா ஆலிம்!

நாங்கள் உன்னிடம் வேண்டுகிறோம். எங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வைப்பாயாக! நாங்கள் உன்னிடமே கேட்கிறோம். எங்களுக்கு வழங்குவாயாக! நாங்கள் பாவங்களைச் செய்து விட்டோம்; எங்களுக்கு

மன்னிப்பை வழங்குவாயாக! உன்னிடமே நாங்கள் அழுது மன்றாடுகிறோம்; முனங்குகிறோம். எங்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! யா சமீஃ ! யா கபீர்!
எங்களின் நிலையை சிறப்பானதாக ஆக்குவாயாக! பலஹீனத்திலிருந்து பலமான நிலையின் பக்கமும், கஷ்டமான நிலையிலிருந்து எளிதான நிலைக்கும், பயத்திலிருந்து அமைதியின் பாலும், அவமானத்திலிருந்து மரியாதையான நிலையின் பாலும், நிராசையிலிருந்து ஆதரவின் பாலும், பிரிவிலிருந்து ஒற்றுமையின் பாலும், வழி தவறுவதிலிருந்து நேர்வழியின் பாலும் எங்களைத் திருப்புவாயாக!

யா அல்லாஹ்! யா அஃபுவ்வுன்! யா கஃபூர்!
நீ அனைத்தையும் அறிபவனாக இருக்கின்றாய்! எங்களின் நிலையையும் எங்களின் பிரார்த்தனைகளையும் அறிபவனாக இருக்கின்றாய். எங்களின் நல்ல நோக்கங்களை நிறைவேற்றுவாயாக! எங்களின் செயல்பாடுகளைப் பரிபூரணமாக்குவாயாக! எங்களின் நிலையை உறுதியாக்குவாயாக! உனது அருள் மழையை எங்கள் மீது பொழிவாயாக! அதிகம் மன்னிக்கும் மனப்பான்மை கொண்ட யா அல்லாஹ்! எங்களின் பாவங்களை மன்னிப்பாயாக! "ஃபித்ரா" எனப்படும் இயற்கையான நிலையின் பால் எங்களைத் திருப்பி, வெற்றி பெற்ற உனது அடியார்களில் நின்றும், இச்சிறந்த காலைப் பொழுதில் எங்களை ஆக்குவாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**

**அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هذَا وَأَسْتَغْفِرُ اللَّهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.

**<u>Second Sermon</u>**
**25 June 2017 / 1 Syawal 1438**

الله أكبر **7x**

اَلْحَمْدُ للهِ الَّذِى أَعَادَ الأَعْيَادَ وَكَرَّرَ. أَحْمَدُهُ سُبْحَانَهُ اَنْ خَلَقَ وَصَوَّرْ. وَأَشْهَدُ اَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، شَهَادَةً يَثْقُلُ بِهِ الْمِيْزَانَ فِى الْمَحْشَرْ. اَللَّهُمَّ فَصَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ الْفَائِزِينَ بِالشَّرَفِ الأَفْخَرْ.

أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهْ وَلاَ تَمُوتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُونَ.

وَصَلُّوا عِبَادَ اللهِ عَلَى رَسُولِ الْهُدَى وَخَيْرِ الْــوَرَى فَقَــدْ أَمَرَكُمْ بِذَلِكَ الْمَوْلَى جَلَّ وَعَلاَ حَيْثُ قَالَ: إِنَّ اللهَ وَمَلاَئِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِي، يَآ أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا.

اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى رَسُولِكَ الْمُجْتَبَى وَنَبِيِّكَ الْمُصْطَفَى سَيِّدِنَا مُحَمَّدٍ أَفْضَلِ الْخَلْقِ وَخَيْرِ الْوَرَى. وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَهْلِ الصِّدْقِ وِالْوَفَى.

اَللَّهُمَّ وَارْضَ عَنِ الْخُلَفَاءِ الرَّاشِدِينْ أَبِى بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِي، وَعَنْ بَقِيَّةِ الصَّحَابَةِ وَالْقَرَابَةِ أَجْمَعِينْ وَتَابِعِيهِمْ إِلَــى يَوْمِ الدِّينْ.

اَللّٰهُمَّ اغْفِرْ لِلْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ اَلأَحْيَاءِ مِنْهُمْ وَالأَمْوَاتْ إِنَّكَ قَرِيْبٌ مُجِيْبُ الدَّعَوَاتْ وَغَافِرُ الذُّنُوبِ وَالخَطِيئَاتْ. رَبَّنَا ظَلَمْنَا أَنْفُسَنَا وَإِنْ لَمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ. رَبَّنَا لاَتُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابْ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارْ. وَأَدْخِلْنَا الْجَنَّةَ مَعَ الأَبْرَارْ. يَآ اللهُ يَآ عَزِيْزْ يَآ غَفَّار.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونْ. فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ وَلَذِكْرُ اللهِ أَكْبَرْ. وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونْ.